டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 180 - Madurai | Online Edition

# ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டம் உள்ளூர் கலைஞர்கள் மற்றும் பாரம்பரிய திறனை அங்கீகரிக்கிறது

புது தில்லி, ஜன.24

ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டம், உள்ளூர் கைவினை ஞர்களை மேம்படுத்துவதுடன், பாரம்பரிய திறன்களை மீட்டெடுக்கவும் உதவுகிறது. நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ், 770-க்கும் அதிகமான மாவட்டங்கள் பொருளாதார மையங்களாக உருவெடுத்து வருகிறது. அரசின் மின்னணு சந்தை போன்ற முன்முயற்சிகள் உள்ளூர் தயாரிப்பு களை சந்தைப்படுத்துவற்கு உதவுகின்றன.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தனிச்சிறப்பு மிக்க தயாரிப்பு அடை யாளம் காணப்பட்டு, அதற்கு வணிக முத்திரை வழங்குவதுடன், சந்தை வாய்ப்புகளை விரிவுப்படுத்தவும் வகை செய்கிறது.

மேலும் கைவினைப் பொருட்களுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் உள்ளூர் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதன் மூலம் அவர்களது வருவாயை அதிகரிக்க உதவுகிறது. இதுபோன்ற நடவடிக்கைகள் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தற்சார்பு நிலையை வலுப்படுத்தவும் உதவுகிறது.

இத்தகைய முயற்சிகள் மாவட்டந்தோறும் வேலை வாய்ப்பு களை அதிகரிக்க உதவுவதுடன், தொழில் முனைவோரை தேசிய அளவிலும், உலகளாவிய சந்தை களிலும் போட்டியிடும் திறனை மேம்படுத்தவும் வகை செய்கிறது.

விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

# கோழி வளர்ப்பு மற்றும் தீவனம் பற்றியும் தீவனத்தால் வரும் நன்மைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

இராமநாதபுரம், ஜன.24

இராமநாதபுரம் மாவட்டம், பேரையூர் அருகே நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி (அருப்புக்கோட்டை) அதன் கீழ்கோபாலபுரம் கிராமத்தில் அதிகளவில் ஒருங்கிணைந்த பண்ணை முறையில் விவசாயம் நடைபெறுகிறது அதன் முக்கியத்தை உணர்ந்து கோழி வளர்ப்பு பற்றியும் அதனோடு அதற்கான தீவனம் பற்றியும் அவற்றோடு தீவனத்தால் வரும் நன்மைகள் பற்றியும் தெளிவுப் படுத்தினோம்.




தீவன பங்கில் முக்கியமான சண்டுப்பூ அல்லது பந்துப்பூ அவற்றின் இதழ்களை நன்கு காயவைத்து அதை அரைத்து தூள் வடிவத்தில் அமைத்து, கோழி தீவனத்தில் கலந்து கொடுத்து வந்தால் கோழி முட்டையின் கரு நிறம் ஆரஞ்சு நிறத்தில் காணப்படும் (xanthophyll). அதனோடு கோழி இறைச்சி சிவப்பு நிறத்தில் காணப்படும். இதனால் கோழியின் எடை கூடும். இதை கோபாலபுரம் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கத்தில் அட்டவணை படுத்தி காண்பித்தோம். இது கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி 27.01.26 மற்றும் 28.01.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- தோசை மிக்ஸ்
- அடை மிக்ஸ்
- டேக்ளா மிக்ஸ்
- பிசிபெலா பாத் மிக்ஸ்
- கீர் மிக்ஸ்
- ஐஸ்கீரிம் மிக்ஸ்
- தக்காளி சாதம் மிக்ஸ்
- சூப் மிக்ஸ்
- குளோப் ஜாமூன் மிக்ஸ்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422 - 6611340, அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

மதுரை, ஜன.24

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் குழுவைச் சேர்ந்த மாணவிகள், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, அலங்காநல்லூரில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் களுடன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை நடத்தினர்.



இந்த பேரணியின் முக்கிய நோக்கம், பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே வாக்குரிமையின் முக்கியத்துவம், வாக்காளர் பதிவு அவசியம், ஜனநாயக கடமை ஆகியவற்றை எடுத்துரைப்பதாகும். பேரணியில் "வாக்களிப்பது நமது உரிமை - அதை தவறாமல் பயன்படுத்துவோம்", "ஒவ்வொரு வாக்கும் நாட்டின் எதிர்காலம்" போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

அலங்காநல்லூர் முக்கிய வீதிகளில் நடைபெற்ற இந்த பேரணியில், மதுரை வேளாண் கல்லூரி மாணவிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர் . இதன் மூலம் இளம் தலைமுறையினரிடையே வாக்குப் பதிவின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




அக்ரி-டாக்டர்

agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்

உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்

எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு

+91 80563 05483

+91 9344811812

நன்றி

# காப்பிளியப்பட்டி கிராமத்தில் பழ ஈ பிணி ஒட்டும் பொறி செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்




திண்டுக்கல், ஜன.24

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர் எம்.சீனிவாசன், தனது ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் உள்ள காப்பிளியப் பட்டி கிராமத்தில் பழ ஈ பிணி ஒட்டும் பொறி (Fruit Fly Trap) குறித்த செயல்விளக்கத்தை 19.01.26 அன்று நடத்தினார்.

இந்த முகாமில் விவசாயிகளிடம் பேசிய மாணவர் சீனிவாசன், பழப்பயிர்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் பழ ஈக்களைக் கட்டுப்படுத்த ரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக, எளிய முறையில் இந்த இனக்கவர்ச்சிப் பொறியை எவ்வாறு தயாரிப்பது என்று நேரிடையாகச் செய்து காட்டினார். மேலும், இந்தப் பொறியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், குறைந்த செலவில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் விதம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விரிவாக விளக்கமளித்தார். இத்தொழில்நுட்பம் காய்கறி மற்றும் பழ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# கரும்பு கரணை நேர்த்தி பற்றி செயல்முறை விளக்கத்தை அளித்த வேளாண் கல்லூரி

சிவகங்கை, ஜன.24

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் திராணி கிராமத்தில் செட்டிநாடு



வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு கரும்பு கரணை நேர்த்தி பற்றிய செயல்முறை விளக்கத்தை அளித்தனர். கரும்பு கரணை நேர்த்தி செய்வதால் முளைப்பு திறன் மற்றும் மகசூல் அதிகரிப்பதுடன், பூச்சி மற்றும் புல்தழை குட்டை நோயினால் ஏற்படும் போது பயிர் சேதங்களை தவிர்க்கலாம் என தெரிவித்தனர்.



# தென்னை டானிக் பயன்படுத்தும் முறைகள் மற்றும் செய்முறை குறித்து விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.24

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர், ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோக வர்ஷினி, யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி உழவர் பெரு மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம். லால்குடியில் உள்ள பூவாளூர் கிராமத்தில் வேளாண் மாணவிகள் தென்னை டானிக் பயன்படுத்தும் முறைகள் மற்றும் செய்முறை குறித்து விளக்கினார்கள். தென்னை டானிக் பயன்படுத்துவதால் பச்சையம் அதிகரிக்கும், ஒளிச்சேர்க்கை திறன் கூடும், பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும், குரும்பை கொட்டுதல் குறையும், காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும், விளைச்சல் 20 சதவிதம் வரை அதிகரிக்கும், பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தி கூடும் என்று கூறினார்கள்.

ஒரு வருடத்திற்கு இரண்டு பாக்கெட் (200 மி.லி.) டானிக்கை 6 மாத இடைவெளியில் வேர் மூலம் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு பயன்படுத்தும் முறை பற்றி தெரிவித்தார்கள்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பயிர்களை சேதப்படுத்தும் பன்றிகள், நாரைகளை விரட்ட புதிய 'ஒலி எழுப்பும் கருவி' : விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்



திருவள்ளூர், ஜன.24

விவசாய நிலங்களில் காட்டுப்பன்றிகள் மற்றும் நாரைகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்தைத் தடுக்க, குறைந்த செலவில் உருவாக்கப் பட்ட 'பறவை மற்றும் விலங்கு விரட்டி' (Bird and Animal Scarer) குறித்த செயல்முறை விளக்கம் டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் (Don Bosco College of Agriculture students) பனப்பாக்கம் பகுதியில் நடத்தினர்.

## முக்கிய பிரச்சனைகள்

சமீப காலமாக விளைநிலங்களில் புகுந்து பயிர்களை வேரோடு பிடுங்கும் காட்டுப்பன்றிகள் மற்றும் நெற்பயிர்களை சேதப்படுத்தும் நாரைகளால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். இதனைத் தடுக்க இரவு நேரங்களில் காவல் காப்பது கடினமாக உள்ள நிலையில், இந்தப் புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## கருவியின் சிறப்பம்சங்கள்

- **ஒலி அதிர்வுகள் :** இந்தக் கருவி குறிப்பிட்ட கால இடைவெளியில் வெடிச் சத்தம் போன்ற பலத்த ஒலியை எழுப்புகிறது. இது பன்றிகள் மற்றும் நாரைகளை அச்சமடையச் செய்து விளைநிலங்களுக்குள் நுழைய விடாமல் தடுக்கிறது.
- **பகலும் இரவும் :** பகல் நேரங்களில் நாரைகளை விரட்டவும், இரவு நேரங்களில் பன்றிகளை விரட்டவும் பயன்படும்.
- பராமரிப்பு செலவு மிகக் குறைவு.

● **சுற்றுச்சூழல் பாதுகாப்பு :** இது விலங்குகளுக்கு எந்தவித உடல் ரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தாது; வெறும் ஒலியின் மூலம் மட்டுமே அவற்றை அப்புறப்படுத்துகிறது.

**செயல்முறை விளக்கம்**

விவசாயிகளின் முன்னிலையில் இந்தக் கருவி வயலில் பொருத்தப்பட்டு, அதன் செயல்பாடு காண்பிக்கப்பட்டது.

‘தொடர்ச்சியாக ஒரே மாதிரியான சத்தம் கேட்டால் விலங்குகள் பழகிவிடும் என்பதால், இதில் வெவ்வேறு விதமான சத்தங்களை மாற்றியமைக்கும் வசதி உள்ளது‘ என்றனர்.



# மாசு இல்லாத உலகம் படைப்போம் - ஒரு பார்வை




மாசு இல்லாத உலகம் என்பது காற்று, நீர், நிலம் (மண்) ஆகியகை தூய்மை யாக இருக்கும் ஒரு சூழலைக் குறிக்கிறது. இதில் மனிதர் களும் பிற உயிரினங்களும் ஆரோக்கியமாக வாழ முடியும். நெகிழி (PLASTICS) பயன்பாட்டைக் குறைப்பது, தொழிற் சாலை மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவது மீண்டும் மஞ்சப்பை போன்ற திட்டங்கள், தூய்மை இந்தியா இயக்கம் ஆகியவை மூலம் இதை அடையலாம்.

**பல்வேறு மாசுகளை விரிவாக பார்ப்போம்.**

மழைக்காலத்தில் சாதாரண நிலையில் கனமழை பெய்கிறது. மழைக்காலத்தில் சரியான வெப்ப நிலை வருகிறது. இவை எல்லாம் காலநிலை மாற்றத்தால் தான். உலகிலே அதிக மாசுள்ள நகரமாக நம்முடைய தலைநகர் தில்லி தான் உள்ளது. வானத்தில் ஓசோன் என்ற போர்வையில் ஓட்டை விழுந்து விட்டது. அதற்கு காரணம் அதிக அளவில் பயன் படுத்தப்பட்டு வரும் குளிர்சாதன பெட்டி (A.C) வெளியேற்றும் வாயுவே என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அது தான் முக்கிய காரணமாகும்.

குளோபல் வார்மிங் பற்றி இதுவரை உலக நாடுகளில் போதிய விழிப்புணர்வு துளிகூட இல்லை.

**1) காற்று மாசு (AIR POLLUTION)**

பெரும்பாலும் வாகன போக்குவரத்தால் ஏற்படுகிறது. மேலும் கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை தீயிட்டு எரிப்பதாலும், பட்டாசு வெடிப்பது, தொழிற்சாலைகளின் புகையால் பெரு நகரம் முதல் கிராமம் வரை மாசு அடைகிறது. மக்களுக்கு சுத்தமான காற்று சுவாசிக்க முடியாத நிலையாக உள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### 2) மண் மாசு (SOIL POLLUTION)

மண்ணில் விவசாயிகள் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு கண்ட கண்ட உரங்கள், களைக்கொல்லிகள் மற்றும் பாலித்தன் பைகளால் மண்ணில் மாசு உண்டாகிறது. மண்ணில் உள்ள நுண்ணியிர்களின் எண்ணிக்கை படிப் படியாக குறைந்து அள்ளி அள்ளி கொடுத்த மண் இன்று மகசூலை கிள்ளி கிள்ளிக் கொடுக்கும் நிலை.

### 3) நீர் மாசு (WATER POLLUTION)


இன்று நதிக்கரையோரங்களில் சாயக்கழிவுகள், தொழிற் சாலை கழிவுநீர் கலந்து நுறையுடன் பொங்கி பொங்கி வருகிறது. அன்று தாயை தள்ளினாலும் தண்ணிய தள்ளக் கூடாது என்பது பழ மொழி. ஒரு லிட்டர் பாலைவிட கூடுதலான விலையில் தண்ணீர் (குடிநீர்) விற்பனை செய்யப்படுகிறது. அந்த அளவில் நீர் மாசுபட்ட நிலையில் தான் உள்ளது. புனித நதியாக கருதப்பட்ட கங்கை கூட இன்று மாசுபட்ட நிலையில் உள்ளது.

உலக மக்கள் ஒருங்கிணைந்த முறையில் மாசுவை கட்டுப் படுத்த முயல வேண்டும். மாசு இல்லாத உலகம் படைக்க ஸ்டோக் ஹோம் மாநாட்டில் 1972 தீர்மானம் போடபட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

தனி ஒருவனாக இல்லாமல் ஓட்டு மொத்த சமுதாயமே ஒருங்கிணைந்த முறையில் செயல் பட்டால் மாசு இல்லாத உலகத்தை படைக்கலாம் வெகு விரைவாக.

என்ன, ஒருங்கிணைப்போம்! ஒன்று சேர்ந்து வாங்க!!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை அமைத்தல் மற்றும் பயன்பாடு குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, ஜன.24

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், கோனம்பட்டி கிராமத்தில் 19.01.26 அன்று பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை (Zero Energy Cooling Chamber) அமைத்தல் மற்றும் பயன்பாடு குறித்து விளக்கக் காட்சி நடத்தப் பட்டது. இவ்விளக்கக் காட்சி, விவசாயிகள் தங்களின் காய்கறி, பழங்கள் மற்றும் பிற தோட்டக் கலை விளைபொருட்களை மின்சாரம் இன்றி குறைந்த செலவில் பாதுகாக்கும் தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ளும் நோக்கில் நடத்தப்பட்டது.

செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை யத்தின் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் இறுதியாண்டு மாணவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை செங்கல், மணல் மற்றும் ஈர மணல் அடுக்குகள் கொண்டு அமைக்கப்படும் முறை, அதில் நிகழும் ஆவியாக்க குளிர்ச்சி (Evaporative cooling) செயல்முறை மற்றும் அதன் மூலம் வெப்பநிலை குறைந்து ஈரப்பதம் அதிகரிக்கும் விதம் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது.

மேலும், இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் அறுவடை பிந்தைய இழப்புகளை குறைக்கலாம், விளைபொருட் களின் தரம் மற்றும் எடை பாதுகாக்கப்படும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்பதையும் மாணவர்கள் எடுத்துரைத்தனர். விவசாயிகள் நேரில் பார்த்து சந்தேகங்களை கேட்டு, இத்தொழில்நுட்பத்தை தங்களது கிராமங்களில் பயன் படுத்த ஆர்வம் காட்டினர். இவ்விளக்கக் காட்சி விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததுடன், நிலையான வேளாண்மை மற்றும் வளங்களைச் சேமிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# நீர் மோர் ஆரோக்கிய நன்மைகள்!

நீர் மோர் அல்லது மோர் (Buttermilk), என்பது இந்திய துணைக் கண்டத்தில், குறிப்பாக தென்னிந்தியாவில், பல நூற்றாண்டு களாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு பாரம்பரிய பானமாகும். இது தயிரைக் கடைந்து வெண்ணெய் நீக்கிய பின் கிடைக்கும் திரவமாகும்.

தமிழ்நாட்டில் இதை நீர் மோர் என்றும், ஆயுர் வேதத்தில் தக்ரா (Takra) என்றும் அழைக்கின்றனர். இது வெறும் கோடைக்கால பானம் மட்டுமல்ல; செரிமானம், நீரேற்றம் மற்றும் ஒட்டு மொத்த ஆரோக்கியத்திற்குப் பங்களிக்கும் ஒரு சக்தி வாய்ந்த மருந்தாகவும் கருதப்படுகிறது.

**1. ஊட்டச்சத்து மற்றும் கலோரி ஒப்பீடு**

நீர் மோர், தயிரை விட மிகவும் ஆரோக்கியமான மற்றும் குறைந்த கலோரி கொண்ட மாற்றாகும். தயிரில் உள்ள கொழுப்பு மற்றும் கலோரிகள், மோரில் வெண்ணெய் நீக்கப்படு வதால் வெகுவாகக் குறைகின்றன.

| அம்சம் | தயிர் (100 கிராம்) | நீர் மோர் (100 கிராம்) |
|---|---|---|
| கலோரிகள் | சுமார் 98 kcal | சுமார் 40 kcal |
| கொழுப்பு | சுமார் 4.3 கிராம் | சுமார் 0.9 கிராம் |
| புரதம் | சுமார் 3.5 கிராம் | சுமார் 3.3 கிராம் |
| கால்சியம் | சுமார் 121 மி.கி | சுமார் 116 மி.கி |
| செரிமானம் | மிதமானது | மிக எளிதானது |

இந்த ஒப்பீட்டின்படி, நீர் மோர் குறைந்த கொழுப்பு மற்றும் குறைந்த கலோரி கொண்ட பானமாக இருப்பதால், உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க விரும்புவோருக்கு இது ஒரு சிறந்த தேர்வாகும். இது கால்சியம், வைட்டமின் B 12, ரிபோஃப்ளேவின் மற்றும் பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் நல்ல மூலமாகவும் உள்ளது.

### 2. செரிமான மண்டலத்திற்கான நன்மைகள் (புரோபயாடிக் சக்தி)

நீர் மோரின் மிக முக்கியமான நன்மை அதன் செரிமானத்தை மேம்படுத்தும் திறன் ஆகும்.

**புரோபயாடிக்குகள் :** மோரில் உள்ள நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் (புரோபயாடிக்குகள்) குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன. இவை செரிமான செயல்முறையை சீராக்கி, குடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராட உதவுகின்றன.

**அசிடிட்டி மற்றும் வயிறு உப்புசம் :** தயிர் சிலருக்கு அசிடிட்டி அல்லது வயிறு உப்புசத்தை ஏற்படுத்தலாம், ஆனால் நீர் மோர் செரிமானத்தை எளிதாக்குவதால், இந்த பிரச்சனைகளைத் தணிக்கிறது. குறிப்பாக, இஞ்சி, பெருங்காயம், கறிவேப்பிலை போன்ற மசாலாப் பொருட்கள் சேர்க்கப்படும்போது, அதன் செரிமானத் திறன் மேலும் அதிகரிக்கிறது.

**ஆயுர்வேத பார்வை :** ஆயுர்வேதத்தில், மோர் (துக்ரா) செரிமான நெருப்பை (அக்னி) தூண்டுவதாகவும், வீக்கம் மற்றும் செரிமானக் கோளாறுகளுக்கு சிகிச்சையளிப்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது கபம் மற்றும் வாத தோசங்களை சமநிலைப் படுத்த உதவுகிறது.

### 3. நீரேற்றம் மற்றும் உடல் குளிர்ச்சி

கோடை காலத்தில் நீர் மோர் ஒரு வரப்பிரசாதமாகும்.



**நீரேற்றம் (Hydration) :** வியர்வை மூலம் உடலில் இருந்து வெளியேறும் நீர் மற்றும் எலக்ட்ரோலைட்டுகளை (உப்பு) ஈடுசெய்ய நீர் மோர் உதவுகிறது. இது நீரிழப்பைத் தடுத்து, உடலை புத்துணர்ச்சியுடன் வைக்கிறது.

**உடல் வெப்பத்தைத் தணித்தல் :** இது உடலின் உள் வெப்ப நிலையைக் குறைத்து, வெப்ப சோர்வு (Heat Exhaustion) ஏற்படு வதைத் தடுக்கிறது. பாரம்பரியமாக, நீர் மோர் என்பது கோடைக் கால விருந்துகளிலும், பயணத்தின் போதும் வழங்கப் படும் ஒரு அத்தியாவசிய பானமாகும்.

### 4. பாரம்பரிய தயாரிப்பு முறை மற்றும் கூடுதல் நன்மைகள்

பாரம்பரிய நீர் மோர் என்பது வெறும் தயிர் மற்றும் தண்ணீர் கலவை அல்ல. அதில் சேர்க்கப்படும் பொருட்கள் அதன் மருத்துவ குணங்களை அதிகரிக்கின்றன.

**இஞ்சி :** செரிமானத்தை மேம்படுத்துகிறது மற்றும் வாய்வுத் தொல்லையைக் குறைக்கிறது.

**பெருங்காயம் :** வாயுவை வெளியேற்றும் பண்புகளைக் கொண்டுள்ளது.

**கறிவேப்பிலை மற்றும் கொத்தமல்லி :** சுவை மற்றும் நறுமணத்தை அளிப்பதுடன், ஆக்ஸிஜனேற்ற (Antioxidant) பண்புகளையும் வழங்குகின்றன.

**பச்சை மிளகாய் (விரும்பினால்) :** உடலின் வளர்சிதை மாற்றத்தை (Metabolism) லேசாகத் தூண்டுகிறது. இந்தக் கலவை, மோரை ஒரு எளிய பானமாக இல்லாமல், இயற்கையான மருந்தாக மாற்றுகிறது.

நீர் மோர் என்பது குறைந்த கலோரி, அதிக ஊட்டச்சத்து மற்றும் சிறந்த புரோபயாடிக் பண்புகளைக் கொண்ட ஒரு பாரம் பரிய பானமாகும். இது செரிமானத்தை மேம்படுத்துதல், உடலை நீரேற்றத்துடன் வைத்திருத்தல் மற்றும் கோடை வெப்பத்தைத் தணித்தல் போன்ற பல நன்மைகளை வழங்குகிறது. தயிர் அல்லது பிற பால் பொருட்களை விட இது எளிதில் செரிமானம் ஆவதால், அனைத்து வயதினருக்கும் இது ஒரு சிறந்த ஆரோக் கிய பானமாகத் திகழ்கிறது. இதன் நன்மைகளை உணர்ந்து, இதை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வது ஒட்டு மொத்த ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்.

நீர் மோர் குடியுங்கள்! உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத் துங்கள்!.

**தகவல் : கோ.சுரேஷ்குமார், மைக்ரோ கிரீன் வளர்ப்பு செயல் பாட்டாளர், கோவில்பட்டி.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்



சிவகங்கை, ஜன.24

சிங்கம்புணரி அருகே அ.காளாப்பூர் வேளாண் துறை சார்பில் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிய ஆலோசனை நடைபெற்றது. இதில் மதர் தெரசா வேளாண் கல்லூரி மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்திற்காக பங்கேற்றனர். திட்டத்திற்கான விழா விவசாய அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

வேளாண் கல்லூரி மாணவர்கள் தங்களின் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டம் பற்றி எடுத்துரைத்தனர். ஊரக பகுதிகளில் உள்ள விவசாய பிரச்சினைகளுக்கு நேரடி தீர்வு வழங்குவது, மாணவர்கள் கல்வியில் கற்றதை நடைமுறை பயிற்சியாக மாற்றுவது ஆகியவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இதில் 65 நாட்கள் ஊரக தீர்த்தப் போதும் உழுது வேளாண் பணி அனுபவ பாடத்திட்டம் நடைப்பெற உள்ளது. இதில் மாணவர்கள் சிங்கம்புணரி வட்டத்தில் உள்ள அனைத்து விவசாய கிராமங்களுக்கும் சென்று விவசாயிகளிடம் இருந்து விவசாயத்தை நேரடியாக கற்றும், மாணவர்கள் கல்வியில் கற்றதை செயல்முறை பாடத்தின் மூலம் கற்றுத் தருவோம் என்றும் கூறினர்.

“பலகையில் தொடங்கிய கல்வி, பயிர் வயலில் நிறைவேறும் போது உழவன் உண்மையான விஞ்ஞானியாக மாறுகிறான்” என்ற கருத்தை முன்னிறுத்தி, அந்தக் கோட்பாட்டைப் போலவே தாங்கள் செயல்பட உள்ளதாக மதர் தெரசா வேளாண் கல்லூரி மாணவர்கள் தெரிவித்தனர்.

சிங்கம்புணரி வட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கல்லூரி மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வேளாண் துறை ஆய்வாளர் மற்றும் வேளாண்மை கல்லூரி முதல்வர் அன்புடன் கேட்டுக் கொண்டனர்.

# சேவையூர் FPOயுடன் இந்தியன் பொட்டாஷ் லிட்., (IPL) இணைந்து நடத்திய வயல் தினவிழா




விருதுநகர், ஜன.24

விருதுநகர் மாவட்டம், சேவையூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்துடன் இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் இணைந்து 23.1.26 அன்று நெடுங்குளம் கிராமத்தில் முன்னோடி விவசாயியும் FPO நிறுவன இயக்குநருமான கணேசன் வயலில் வயல் தினவிழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் துவக்க உரையாற்றிய FPO செயல் அலுவலர் பார்த்த சாரதி கூறுகையில், IPL நிறுவனத்தின் சார்பில் FPO 5 விவசாயி களுக்கு பொட்டாஷ் உரம் வழங்கி பரிசோதனை திடல்கள் அமைத்து, விவசாயிகளிடத்தில் பொட்டாஷ் உரம் இடுவதன் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திட இந்த மாதிரியான வயல் தின விழா உதவும் என்றார்.

நிகழ்வில் IPL AGRNOMIST, ஆண்டப்பன் கூறுகையில். பெரும்பாலான விவசாயிகள் நெல்பயிருக்கு பொட்டாஷ் போடுவதில்லை. இதனால் மகசூல் குறைந்து அதிகமான பதர் நெல் இருக்கிறது, பொக்கு பதர் இல்லாமல் முழு நெல் மணிகளாக விளைய பொட்டாஷ் என்ற சாம்பல் சத்து தேவை. இதை அடியுரமாக பரிந்துரைக்கப்பட்ட அளவில் பாதியும் மீதியை இரு தடவை மேலுரமாக தழைச்சத்து இடும் போது இடவேண்டும். எங்களுடைய கம்பெனியில் தரமான பொட்டாஷ் உரம் உள்ளது. அத்துடன் IPL நிறுவனத்தின் சார்பாக காம்ப்ளக்ஸ் உரங்கள் (16:16:16) (20:20:20) யூரியா வேப்பம் பிண்ணாக்கு, பாலி ஹைலட் என்ற இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு நாடெங்கும் விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

நிகழ்வில் பேசிய அக்ரி அட்வைசர் சந்திரசேகரன் கூறுகையில், இன்று அறுவடை செய்ய நெல் வயலில் அதிகப்படியான தூர்கள்

(TILLERS) மற்றும் வாளிப்பான நெல் மணிகளை எடுத்து காட்டி இந்த மாதிரி நெல்மணிகளை விளைவிக்க சமச்சீரான உரங் களை போட வேண்டும் என்றார். பெரும்பாலான விவசாயிகள் உரம் என்றால் யூரியா தான் (உரப்பொழி) அதிகமாக வாங்கி பயன்படுத்துகின்றனர். அதிகமான விலை உள்ள உரங்களை (பொட்டாஷ்) போன்றவற்றை பயன்படுத்துவதில்லை என்றார். பதிர் பூச்சி நோய் எதிர்க்கும் திறன் பயிருக்கு வர வேண்டு மானால் பொட்டாஷ் உரத்தை இடுவது நல்ல மகசூலை தரும் என்றார்.

நெல் விவசாயி கணேசன், முத்துச்சாமி கூறுகையில், கடந்த தடவை விட இந்த தடவை எங்களுடைய நெல் வயலில் அதிகப் படியான பதர் நெல் இல்லை. நோய்களும் அதிகமாக தாக்க வில்லை. நாங்கள் பயிரிடப்பட்ட பிபிடி நெல்லில் கடந்த தடவை விட இந்த தடவை குறைவான பூச்சி மருந்து தெளித்தோம். இதற்கெல்லாம் காரணமாக இருப்பது பொட்டாஷ் உரம் என்பது கண் கூடாக தெரிகிறது என்றனர். கடந்த தடவை விட இந்த தடவை எங்களுக்கு 3-4 மூட்டை நெல் விளைச்சல் அதிகரிக்கு மென கூறினார். இதற்கு முன்பாக நாங்கள் அடியுரமாக தான் ஒரு தடவை தான் பொட்டாஷ் போட்டோம், இந்த முறை IPL, நிறுவன அலுவலர்கள் மற்றும் சேவையூர் ய்ணேநு அக்ரி அட்வைசர் கூறியதன் பேரில் மேலுரமாக இரண்டு தடவை தழைசத்து உரத்துடன் பிரித்து இட்டதன் விளைவாக இந்த விளைச்சல் ஏற்பட்டதாக தெரிவித்தனர். விழாவில் இந்திரா, அன்னலட்சமி, முத்துச்சாமி மற்றும் விற்பனை பிரதிநிதி அய்யப்ப பாண்டி உட்பட ஏராளமான நெடுங்குளம் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நம்முடைய பகுதியில் முஸ்டக்குறிச்சி முடுக்கன் குளம் கீழக் காஞ்சிரங்குளம் மற்றும் அ.முக்குளம் போன்ற கிராமங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இங்கு சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் 2545 என்ற விலையிலும் மோட்டா ரக நெல்லுக்கு 2500/- குவிண்டால் விலையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. உரிய ஆவணத்துடன் 17% ஈரப்பதற்குள்ளாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த வயல்தின விழா சிசிடி செயல் இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர் ஜான்பிரிட்டோ மற்றும் ஹுஐணஸி துணை மேலாளர் ஹரிபாபு வழிகாட்டுதலின் பேரில் சிறப்பாக நடைபெற்றது.


# இலை வண்ண அட்டை பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாகப்பட்டினம், ஜன.24

நாகப்பட்டினம் மாவட்டம், மணக்குடி, கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இறுதி ஆண்டு வேளாண் மாணவர்கள் சங்கர் மு, பா மணிகண்டன், பிரிய தர்சன் சி, கிர்த்திக் ரா, ஹரி பிரசாந்த் ந, அரவிந்த் த, பரணிதரன் செ, ர மணிகண்டன் ஆகியோர் மணக்குடி கிராமத்தில் விவசாயிகளுக்காக இலை வண்ண அட்டை பயன்பாடு குறித்த செய்முறை விளக்கக் காட்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், நெற் பயிர்களில் நைட்ரஜன் ஊட்டச்சத்து தேவையை சரியாக கண்டறிந்து, உரங்களை தேவையான அளவில் மட்டும் பயன்படுத்துவது எப்படி என்பதைக் குறித்து மாணவர்கள் விளக்கினர். இலைகளின் நிறத்தை இலை வண்ண அட்டையை ஒப்பிட்டு, யூரியா உரம் இட வேண்டிய சரியான காலமும் அளவும் தீர்மானிக்கலாம் என்பதை செய்முறையாக காட்டினர். இதனால் உரச் செலவு குறையும், பயிர்களின் வளர்ச்சி மேம்படும், மகசூல் அதிகரிக்கும் என்பதையும், மண் வளமும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும் என்பதையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.



# காளான் வளர்ப்பு மற்றும் காளான் வித்து தயாரிப்பு - ஒரு பார்வை




தமிழ்நாட்டில் காளான் வளர்ப்பு (Mushroom Cultivation) மற்றும் காளான் வித்து தயாரிப்பு (Spawn Production) ஒரு லாபகரமான வேளாண் தொழிலாக மாறி வருகிறது. காளான் வித்துக்கள் (Spawn) என்பது காளான் வளர்ப்பிற்குத் தேவையான மிக முக்கிய உள்ளீடாகும். இது காளான் விதையாகச் செயல்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் கிருஷி விஞ்ஞான் கேந்திரா (KVK) ஆகியவை காளான் வித்து உற்பத்தியில் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குகின்றன.

**காளான் வித்து தயாரிப்பு முறை (Spawn Production Method)**

காளான் வித்துக்கள் பொதுவாக கம்பு அல்லது சோளம் போன்ற தானியங்களை ஊடகமாகப் பயன்படுத்தி, சுத்தமான, கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஆய்வகச் சூழலில் தயாரிக்கப்படுகின்றன.

**தானியங்களைத் தேர்ந்தெடுத்தல் :** சோளம் (Sorghum) அல்லது கம்பு தானியங்கள் சிறந்த ஊடகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**ஊற வைத்தல் மற்றும் வேகவைத்தல் :** தானியங்களைச் சுத்தப் படுத்தி, தண்ணீரில் 30 நிமிடம் வேகவைக்க வேண்டும். தானி யங்கள் உடையாமல், 50-60% ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**கால்சியம் கார்பனேட் சேர்த்தல் :** வேகவைத்த தானியங்களில் 2% கால்சியம் கார்பனேட் ($CaCO_3$) கலந்து, ஈரப்பதம் சமமாக இருக்குமாறு பரப்பி வைக்க வேண்டும்.

**பாட்டில்களில் நிரப்புதல் :** இந்த கலவையை பாலிப்ரொப்பிலீன் (PP) பைகளில் அல்லது கண்ணாடி பாட்டில்களில் 3/4 பங்கு வரை நிரப்ப வேண்டும்.

**பதப்படுத்துதல் (Sterilization) :** பாட்டில்களின் வாயில் பருத்திப் பஞ்சு வைத்து அடைத்து, ஆட்டோகிளேவ் (Autoclave) கருவியில் 20 lbs அழுத்தத்தில் 2 மணி நேரம் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

**வித்து நடுதல் (Inoculation) :** குளிர்விக்கப்பட்ட பாட்டில்களில், சுத்தமான காளான் வளர்ப்புப் பிரிவில் (Culture room) ருந்து சுத்தமான காளான் மைசீலியம் (Mother spawn) சேர்க்கப்படுகிறது.

**பரிணாம வளர்ச்சி (Incubation) :** பாட்டில்களை 25-28°C வெப்ப நிலையில் வைத்து, மைசீலியம் தானியங்களில் முழுமையாக வளர (சுமார் 15-20 நாட்கள்) விட வேண்டும்.

**சேமிப்பு :** முழுமையாக வளர்ந்த வித்துக்கள் 4°C வெப்ப நிலையில் சேமிக்கப்படலாம்.

**தமிழ்நாட்டில் காளான் வித்து உற்பத்தி சிறப்பம்சங்கள்**

**ஊடகத் தெரிவு :** TNAU சோள தானியங்களை சிறந்த ஊடகமாகப் பரிந்துரைக்கிறது.

**பொருத்தமான வகைகள் :** தமிழ்நாட்டின் தட்பவெப்பநிலைக்கு, குறிப்பாக ஆயிஸ்டர் காளான் (Oyster Mushroom - MDU-2, APK 2) மற்றும் மில்கி காளான் (Milky Mushroom) வகைகள் வித்து தயாரிப்பிற்கு ஏற்றவை.

**பருவ காலம் :** டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்கள் வித்து வளர்ச்சிக்கு சாதகமான வெப்பநிலையையும் (25-30°C) ஈரப்பதத் தையும் (80-90%) வழங்குகின்றன.

**வெற்றிக் கதைகள் :** தேனி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், சொந்தமாக காளான் வித்து தயாரித்து, தினசரி 500 பாக்கெட்டுகள் வரை உற்பத்தி செய்து லாபம் ஈட்டுகின்றனர்.

**வருவாய் :** ஒரு காளான் வித்து பாக்கெட் (350 கிராம்) தோராயமாக ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**காளான் வித்து தயாரிப்பில் கவனிக்க வேண்டியவை**

**கிருமி நீக்கம் (Sterilization) :** வித்து உற்பத்தியின் போது மாசு படுவதைத் தவிர்க்க (Contamination), ஆய்வகச் சூழல் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும்.

**தரமான தாய் வித்து :** தரம் குறைந்த வித்துக்கள் காளான் மகசூலைக் குறைக்கும், எனவே அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் (TNAU/KVK) இருந்து தாய் வித்துக்களைப் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் காளான் வித்து தயாரிப்பு, காளான் வளர்ப்பை விட அதிக லாபம் தரும் ஒரு சிறந்த சுய வேலைவாய்ப்பாகும்.

விபரங்களுக்கு **மு.முகமது பாசில், இளங்கலை வேளாண் மாணவன் மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, Dr. B.கனகராஜ், R.சிங்காரவேல், உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற் பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர். பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, அலைபேசி எண் : 99446 41459, ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333